நிச்சயம் செய்த பிறகு திருமணத்திற்கு மறுப்பு:

மாடியில் இருந்து குதிக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு!

கிருஷ்ணகிரியில் சம்பவம்!!

கிருஷ்ணகிரி ஜன 13

கிருஷ்ணகிரி பழைய பெங்களூர் சாலையில் பைனான்ஸ் மற்றும் டிரா வல்ஸ் நிறுவனம் நடத்தி

வருபவர் குணசேகரன் (30). இவர் திருமணத்திற்காக பெண் தேடி வந்தார். அதன்படி திருமண மேட்ரிமோனி மூலமாக சென்னை கூடுவாஞ்சேரியை சேர்ந்த அஸ்வினி (26) என்கிற பெண்ணை பார்த்து நிச்சயம் செய்துள்ளனர். இந்த நிலையில் நேற்று மாலை கிருஷ்ணகிரி பெங்களூர் பழைய சாலையில் குணசேகரன் நடத்திவரும் நிதி நிறுவனம் மற்றும் டிரா வல்ஸ் அலுவலகம் இரண்டாவது தளத்தில் உள்ள பாதுகாப்பு சுவர் மீது அமர்ந்து கொண்டு அஸ்வினி கீழே குதித்து தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினார். உடனடியாக கிருஷ்ணகிரி டவுன்போலீசார்விரைந்து வந்து அந்த பெண்ணிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, ''நிச்சயதார்த்தம் செய்துவிட்டு தற்போது திருமணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றுகிறார்கள்.

பலமுறை திருமணம் செய்து கொள்ளுமாறு வலியுறுத்தியும் என்னை திருமணம் செய்து கொள்ள மறுக்கிறார்கள்'' என போலீசாரிடம் இளம் பெண் கூறி கதறி அழுதார்.

இதனால் அந்த பகுதியில் பரபரப்பு அதிகரித்தது. கிருஷ்ணகிரி தீயணைப்புத் துறையினர் நீண்ட போராட்டத்திற்கு பிறகு அவரை மீட்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட புள்ளி இயல் துறை சார்பாக அனைத்து அரசு பொது துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் விவரங்கள் அடங்கிய மாவட்ட புள்ளி இயல் கையேற்றினை கலெக்டர் கே.எம்.சரயு வெளியிட்டார். உடன் புள்ளிஇயல் துணை இயக்குனர் நாராயணமூர்த்தி, உதவி இயக்குனர் சுந்தரமூர்த்தி, அலுவலர் கீதா ஆகியோர் இருந்தனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா:

பேச்சு போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசு!

முன்னாள் அமைச்சர் பிச்சாண்டி வழங்கினார்!!

தர்மபுரி,ஜன.13–

தர்மபுரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் நடந்த கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தமிழ் நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் பிச்சாண்டி பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

தருமபுரி ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "சட்டமன்ற நாயகர் கலைஞர்" கருத்தரங்கம் விழாக் குழு இணைத்தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் நடைபெற்றது.

விழா குழு உறுப்பினர் சட்டமன்ற பேரவை முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன் பேருரையாற்றினார். இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் .கி.சாந்தி சிறப்புரை ஆற்றினார். ஜி.கே.மணி எம்.எல்.ஏ வாழ்த்துரை வழங்கினார்.

சட்டமன்ற பேரவைச் செயலக கூடுதல் செயலாளர் பா. சுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார். தருமபுரி அரசு கலைக்கல்லூரி முதல்வர் கோ.கண்ணன் வரவேற்றார். இக்கருந்தரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசியதாவது:–

முத்தமிழறிஞர் கலைஞர் இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் 1989 ஆம் ஆண்டு பெண்களுக்கு சொத்துரிமை சட்டத்தை நிறைவேற்றினார். 15 ஆண்டுகளுக்கு பிறகு பெண்களுக்கு சொத்தில் சம உரிமை சட்டம் இந்தியா முழுவதும் ஒன்றிய அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொதுமக்கள் பேருந்துகளை எளிதாக பயன்படுத்தும் வகையில், பேருந்துகளை பொது உடைமையாக்கப்பட்டதும் கலைஞர் ஆட்சிகாலத்தில் தான்.

தமிழ்நாட்டிலிருந்து, தமிழ் வழியில் பயின்று, தாம் பெற்ற கல்வியால் தான் சந்திராயன் 3 திட்டத்தில் பணியாற்றிய வீரமுத்துவேல் மற்றும் ஆதித்யா திட்டத்தில் பணியாற்றிய சாந்தி ஆகியோர் விஞ்ஞானிகளாவும், சாதனையாளர்களாகவும் மாறி உள்ளனர். எனவே, இங்கு உள்ள மாணவ, மாணவியர்கள் அனைவரும் நல்ல முறையில் கல்வி பயின்று எதிர்காலத்தில் எழுத்தாளர்களாக, பேச்சாளராக, அதிகாரிகளாக, நிறுவன தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் தலைவராக உருவாகி, வாழ்வில் முன்னேறி, சாதனையாளராக, தங்கள் வாழ்வில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் மாவட்டம் முழுவதும் உள்ள கல்லூரி மற்றும் பள்ளிகளில் இருபிரிவுகளாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் முதல் 5 இடங்களை பெற்ற மாணவர்கள் இக்கருத்தரங்கில் பேசினர். அவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, கல்லூரி மற்றும் பள்ளி ஆகிய இருபிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, சட்டமன்ற பேரவை செயலக இணை செயலாளர் மு.கருணாநிதி, கல்லூரி கல்வித்துறை மண்டல இணை இயக்குநர் முனைவர். நா. இராமலட்சுமி, முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதி சந்திரா, தருமபுரி நகர்மன்ற தலைவர் மா.இலட்சுமி, தொடக்க கல்வி மாவட்ட கல்வி அலுவலர் மான்விழி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

பாலக்கோடு தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் ஆறுமுகம் தலைமையில் வருவாய் அதிகாரிகள், கிராம நிர்வாகிகள் பொங்க விழாவை உற்சாகமாக கொண்டாடினர்.

சேலம் மத்திய மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் சேலம் புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள கலைஞர் மாளிகையில் நடந்தது . மத்திய மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பேசினார்.

சேலம் மத்திய மாவட்டத்தில்

பேரூர், ஊராட்சிகளில் பொங்கலிட்டு அரசின் சாதனைகளை விளக்க வேண்டும்!

ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்!!

சேலம்,ஜன.13–

சேலம் மத்திய மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் சேலம் புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள கலைஞர் மாளிகையில் நடந்தது . மத்திய மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பேசினார். திமுக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலம் பெத்த நாயக்கன்பாளையத்தில் வரும் 21 ஆம் தேதி காலை8மணிக்குதொடங்கி இரவு 7 மணி வரை நடக்கிறது. இந்த மாநாட்டில் திமுக தலைவரான முதல்வர் மு க ஸ்டாலின் இளைஞரணி செயலாளரான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கின்றனர். இதற்காகவரும்20ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்கு சேலம் விமான நிலையத்தில் வந்திறங்கும் அவர்களுக்கு சிறப்பான வரவேற்புஅளிக்கவும், மேலும் கொண்ட லாம்பட்டி ரவுண்டானா பகுதியில் மாநக ராட்சி வார்டு பகுதி நிர்வாகிகள் அணியினர் திரளாக பங்கேற்று வரவேற்பு அளிக்கவும் திமுக மத்திய மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டில் மத்திய மாவட்ட திமுக இளைஞரணியினர் 30 ஆயிரம் பேர் கலந்து கொள்வது எனவும் தீர்மானம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடிட முதல்வர் மு க ஸ்டாலின் ஆயிரம் ரூபாயுடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கியுள்ளார் இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அன்று மத்திய மாவட்டம் முழுவதும் பேரூர் ஊராட்சி மாநகர பகுதி வட்டங்கள் தோறும் பொங்கல் வைத்து திமுக அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்து கூறி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. கூட்டத்தில் மேயர் ராமச்சந்திரன், அவைத் தலைவர் சுபாஷ், பொருளாளர் கார்த்திகேயன்,மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர்தாமரைக்கண்ணன், மாநகர செயலாளர் ரகுபதி, மத்திய மாவட்ட துணை செயலாளர்கள் குமரவேல், திருநாவுக்கரசு, மஞ்சுளா ,மாநகர அவை தலைவர் முருகன், துணை செயலாளர் வக்கீல் கணேசன் ,மற்றும் மண்டல குழு தலைவர்கள் ,பகுதி செயலாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காரமடை அருகே

பைக் விபத்தில் வாலிபர் பலி!

மேட்டுப்பாளையம், ஜன.13–

பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்துள்ள நாயக்கன்பாளையம் பகுதியைச்சேர்ந்த சகோதரர்கள் ஸ்ரீதர்(23), விஜய் பிரதீப்(21). இவர்களது நண்பர் தீபக்(21). இவரும் அதே பகுதியைச்சேர்ந்தவர். மூவரும் நேற்று முன்தினம் இரவு பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து இரண்டு பைக்குகளில் தென் திருப்பதி நால்ரோடு நோக்கி வந்துள்ளனர். இதில் ஒரு பைக்கை தீபக் ஓட்ட பின்னால் ஸ்ரீதர் அமர்ந்துள்ளார். மற்றொரு பைக்கில் விஜய் பிரதீப் மட்டும் வந்துள்ளார். அப்போது, பெள்ளாதி இன்பாநகர்பாலம் அருகே சென்ற போது தீபக் சாலையின் நடுவே இருந்த பள்ளத்தை கவனிக்காமல் வாகனத்தை இயக்கியுள்ளார். இதனால் இருவரும் நிலைதடுமாறி பைக்கில் இருந்து தவறி கீழே விழுந்ததில் படுகாயம் அடைந்துள்ளனர். அக்கம்பக்கத்தினர் அவர்களை மீட்டு மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு ஸ்ரீதரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். தொடர்ந்து தீபக்கிற்கு முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர், சேசம்பட்டி கிராமங்களில் வாக்காளர் வீடுகளுக்கே சென்று திருத்தப்பணிகளை தர்மபுரி வாக்காளர் பட்டியல் பார்வையாளரும், மீனவர் நலத்துறை ஆணையருமான பழனிசாமி ஆய்வு மேற்கொண்டார். அருகில் தர்மபுரி வருவாய் அலுவலர் கீதா ராணி உள்ளார்.

அ.தி.மு.க. சார்பில்

எம்.ஜி.ஆர். பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும்!

முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் அறிக்கை!!

தர்மபுரி,ஜன.13–

தர்மபுரி மாவட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என முன்னாள் அமைச்சரும் தர்மபுரி மாவட்ட அதிமுக செயலாளருமான கே.பி. அன்பழகன் எம்.எல்.ஏ. கட்சி நிர்வாகிகளையும், தொண்டர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

தமிழக முன்னாள் முதல் அமைச்சரும், அ.தி.மு.க. நிறுவன தலைவருமான டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 107வது பிறந்த நாள் விழா வருகிற 17ம் தேதி (புதன்கிழமை) தர்மபுரி மாவட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை யொட்டி மாவட்டம் முழுவதும் உள்ள எம்.ஜி.ஆர். சிலைகளுக்கும், சிலைகள் இல்லாத ஊர்களில் அவரது உருவப்படங்களுக்கும் கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுகிறேன்.

மேலும் அந்தந்த பகுதியில் பொதுமக்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கிட வேண்டுகிறேன். இந்த நிகழ்ச்சியில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி, கிளை நிர்வாகிகள், சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இதேபோன்று தர்மபுரி மாவட்ட அ.தி.மு.க. சார்பில் தர்மபுரியில் உள்ள மாவட்ட கட்சி அலுவலக வளாகத்தில் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவ சிலைக்கு வருகிற 17ம் தேதி காலை 10 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியிலும் கட்சி நிர்வாகிகள், சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன். இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே பி அன்பழகன் எம் எல் ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காதலியுடன் பேசுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த

அண்ணன் டூவீலரை தீ வைத்து எரித்த காதலன் கைது!

சேலம் ஜன 13

சேலம் பஞ்சந்தாங்கி ஏரி பகுதியை சேர்ந்தவர் ஏழுமலை (33). இவர் சீலநாயக்கன்பட்டி அருகேயுள்ள தனியார் மருத்துவமனையில் தூய்மை பணியாளராகபணியாற்றி வருகிறார். அதே மருத்துவமனையில் மெடிக்கல் பிரிவில் பணியாற்றி வந்த பெண்ணை ஏழுமலை காதலித்தார். அப்பெண்ணை திருமணம் செய்து கொள்ள ஏழுமலை விரும்பினார். அப்படியானால் குடும்பத்தோடு வந்து பெண் கேட்குமாறு அப்பெண் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் செல்லவில்லை. அதன்பிறகு ஏழுமலையின் நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் அவரிடம் அந்த பெண் பேசமறுத்துவிட்டார். வேலையை விட்டும் நின்று விட்டார். ஆனாலும் அந்த பெண்ணிடம் ஏழுமலை பேச முயன்றார். இதனை அறிந்த அந்த பெண்ணின் சகோதரர்கள் ஏழுமலையை கண்டித்துள்ளனர். மேலும் சகோதரிக்கு திருமண ஏற்பாடுகள் செய்துள்ளனர். இந்நிலையில் அம்மாப்பேட்டை பகுதியில் உள்ள அப்பெண்ணின் அண்ணன் பிரகாஷ்ராஜ் டூவீலர் நேற்று முன்தினம் நள்ளிரவு தீ வைத்து எரிக்கப்பட்டது. இது குறித்த தகவலின் பேரில் அம்மாபேட்டை காவல் ஆய்வாளர் பால்ராஜ் விசாரணை மேற்கொண்டார். அந்த விசாரணையில் பிரகாஷ்ராஜின் தங்கையிடம் பேசுவதற்கு பிரகாஷ்ராஜ் கண்டித்ததால் டூவீலரை தீ வைத்து எரித்தது தெரிய வந்தது. இதனை அடுத்து வழக்கு பதிவு செய்த போலீசார் ஏழுமலையை கைது செய்து சிறையில் அடைத்தனர். தங்கையுடன் பேச தடையாக இருந்ததால் அண்ணனின் இருசக்கர வாகனத்தைநபர்தீவைத்து எரித்த சம்பவம் அப்பகுதியில்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளியாகும்

மேட்டூர் அணை நீர்மட்டம் 71 அடி!

மேட்டூர்,ஜன13

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 71 அடியாக உள்ளது.

கர்நாடகா நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததன் காரணமாக மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும் குறைவதுமாக உள்ளது அணைக்கு நீர்வரத்து தற்போது 648 கன அடியில் இருந்து 659 கனியாக அதிகரித்து உள்ளது அணையின் நீர்மட்டம் 71.11 அடியில் இருந்து 71.10 அடியாக குறைந்துள்ளது அணையின் நீர் இருப்பு 33.65 டிஎம்சி ஆகவும் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 600 கன அடி நீர் அணை மின் நிலையம் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மோட்டார் வாகன இழப்பீட்டு நஷ்டஈடு தீர்ப்பாயம், திருச்சிராப்பள்ளி.

I.A.3/2023
in
M.C.O.P. NO. 134/2014-SSJ

M.GNANAVEL AGED 27 YEARS
S/O MURUGESAN, RESIDING AT
NO.1/280-PALLIKUDA THERU,
MANAMEDU P.O. THOTTIAM T.K.
TRICHY
...PETITIONER

/Vs/

1.THE MANAGING DIRECTOR,
MUNDETH WATER SOLUTIONS [P]
LTD. NO 154/1B- MADUR ROAD,
GUNDALPATTI, DHARMAPURI
...1ST PETITIONER

1ம் எதிர்மனுதார்க்கு நோட்டீஸ்

மேற்படி வழக்கு எண்ணில் மனுதாரர்கள் சமூகம் கோர்ட்டில் வாகன விபத்தில் உண்டான இறப்புக்கு இழப்பீடு கோரி மனு செய்துள்ளனர். வழக்கின் 1ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் ஆஜராக 1-2-2024 அன்று SSJ, TRICHY கோர்டில் வாய்தா போடப்பட்டுள்ளது. வழக்கின் ஏதேனும் ஆட்சேபனைஇருப்பின்நாளதுகாலை10.30 மணிக்குஆஜராகிதெரிவித்துகொள்ளவும். இல்லையெனில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறியவும்.

மனுதாரர் வழக்கறிஞர்
C.NAGANATHAN, B.A.,B.L.,
TRICHY-1.

தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்
CIN: L62200TZ1988PLC014460
தளி சாலை, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்
பெலகொண்டபள்ளி 635 114, தமிழ்நாடு
Tel.: + 91 04347 233509 | Fax: + 91 04347 233414
E-mail: secretarial@taal.co.in | Website: www.taal.co.in

தபால் வாக்குப்பதிவு / மின் வாக்குப்பதிவு அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், நிறுவனங்கள் சட்டம் 2013 ('சட்டம்'), பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், வேறு ஏதேனும் இருப்பின் அவை உட்பட, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் ('விதிகள்') (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ மாற்றம்(கள்) அல்லது மறு அமலாக்கம்(கள்) உட்பட) விதி 22 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் ('எம்சிஏ') (இனிமேல் கூட்டாக "எம்சிஏ சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) முறையே வெளியிடப்பட்ட பொதுச் சுற்றறிக்கைகள் ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட எண்.14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட எண். 17/2020, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 9/2023 உட்பட பிற தொடர்புடைய சுற்றறிக்கைகள், செயலகத் தரநிலை – 2 ("SS2") பொதுக் கூட்டங்களில் இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் வழங்கியது மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க பின்வரும் தீர்மானங்களின் மேல் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற டிசம்பர் 26, 2023 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பினை, ஜனவரி 05, 2024 நிலவரப்படி மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பும் பணியை நிறுவனம் வெள்ளிக்கிழமை, ஜனவரி 12, 2024 அன்று முடித்துள்ளது.

1. முன்னுரிமை வெளியீடு மூலம் சம பங்குகளை வெளியிடுவதற்கான ஒப்புதல்
2. ஆஷர் எண்டர்பிரைசஸ் லிமிடெட் உடன் வணிக உறவு தொடர்பான பரிவர்த்தனையில் ஈடுபடுவதற்கான ஒப்புதல்

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44 மற்றும் மேற்சொன்ன எம்சிஏ சுற்றறிக்கைகளின்படி, தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு www.evoting.nsdl.com என்ற இணைப்பில் மின்வாக்களிக்கும் தளம் மூலம் மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்க, நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("என்எஸ்டிஎல்") சேவைகளுக்கு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **ஜனவரி 13, 2024 சனிக்கிழமை காலை 09:00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி பிப்ரவரி 11, 2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 05:00 மணிக்கு (இந்திய நேரப்படி)** முடிவடைகிறது. அதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு என்எஸ்டிஎல்–லினால் முடக்கப்படும். எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு தபால் வாக்கு அறிவிப்புகள் மற்றும் தபால் வாக்கு படிவங்களின் காகித நகல்கள் எதுவும் அனுப்பப்படாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்புகளை தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் மட்டுமே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள், மேற்படி தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கட்ஆப் தேதி அதாவது **வெள்ளிக்கிழமை, ஜனவரி 5, 2024 அன்று,** நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். கட்ஆப் தேதியில் நிறுவனத்தின் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் இந்த அறிவிப்பை தகவலுக்காக என்று மட்டுமே கருத வேண்டும்.

தபால் வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக திரு. எம்.டி. செல்வராஜ், எப்சிஎஸ், M/s. எம்டிஎஸ் அண்ட் அசோசியேட்ஸ், நிறுவன செயலாளர்கள், கோயம்புத்தூர் அவர்கள் ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தபால் வாக்கு முடிவுகள் மின்னணு வாக்குப்பதிவு தளம் மூடப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அறிவிக்கப்படும், மேலும் இது பிஎஸ்இ லிமிடெட்டுக்கு (பிஎஸ்இ) தெரிவிக்கப்படும். மேலும் நிறுவனத்தின் இணையதளம் www.taal.co.in மற்றும் என்எஸ்டிஎல் இணையதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்படும்.

உங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனம்/டெபாசிட்டரியில் பதிவு செய்யவில்லை என்றால், மின்னணு வாக்குப்பதிவிற்கான உள்நுழைவு விவரங்களைப் பெற கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம்:

i. பிசிகல் பங்குதாரர்களுக்கு: போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான் (பான் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) போன்ற தேவையான விவரங்களை நிறுவனம்/ஆர்டிஏ மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் வழங்க வேண்டும்.

ii டிமேட் பங்குதாரர்களுக்கு: உங்கள் மின்னஞ்சல் ஐடி மற்றும் மொபைல் எண்ணை உங்களின் தொடர்புடைய டெபாசிட்டரி பங்கேற்பாளருடன் (DP) புதுப்பிக்க வேண்டும்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் குறைகள்/கேள்விகளுக்கு, பங்குதாரர்கள் evoting@nsdl.co.inஇல் திருமதி பல்லவி மத்ரேக்கு மின்னஞ்சல் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் அல்லது கட்டணமில்லா 1800 102 0990 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது திருமதி அஷ்வினி நவாரே, நிறுவனச் செயலாளர், நிறுவனத்தின் கார்ப்பரேட் அலுவலகம், 503, 5வது தளம், லுங்கார் ஸ்கை ஸ்டேஷன் கூட்டுறவு வளாக சங்கம் லிமிடெட், மனை எண்.109, விமான் நகர், புனே 411 014 அல்லது தொலைபேசி எண்: + 91 04347 233509; அல்லது மின்னஞ்சல் முகவரி: secretarial@taal.co.inல் அணுகலாம்.

தபால் வாக்கு அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.taal.co.in, என்எஸ்டிஎல் இணைய தளம் www.evoting.nsdl.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com ஆகியவற்றில் கிடைக்கிறது.

குழு உத்தரவுப்படி
தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டுக்காக
அஷ்வினி நவாரே
நிறுவனச் செயலாளர்

இடம்: புனே
தேதி: ஜனவரி 13, 2024

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt. Ltd. from Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem- 636004, Tamil Nadu and printed by P.Senthil Azhagan at Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem-636 004, Tamil Nadu. Editor:S.N.Selvam.